# கிறிஸ்து பிறப்பு விடியற்காலைத் திருப்பலி

## திருப்பலி முன்னுரை

இறை இயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள். "நாம் வாழ்வு பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு இவ்வுலகிற்கு வந்த இறைமகன் இயேசு கன்னி மரியாளின் மைந்தனாக அவதரித்த பொன்னாள் இன்று. இறைவன் மனிதனை மீட்க மனுவுரு தரித்த மகத்தான நாள் இன்று. கிறிஸ்து பிறப்பு நமக்கு மகிழ்ச்சியை மட்டும் கொண்டு வரவில்லை. மாறாக நம் மீட்பின் தொடக்கம் இயேசுவின் பிறப்பிலிருந்தே தொடங்குகிறது. இது நம் வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது.

ஆண்டவர் இயேசுவின் பிறப்புச் செய்தி முதலில் வானதூதர்கள் வழியாக இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து விண்மீன் வழியாக ஞானிகளுக்கு அறிவிக்கப்பட்டது. இத்தேடலில் பல இன்னல்கள், இடையூறுகள், தடைக்கற்களை இவர்கள் கடந்து சென்று, ஆண்டவர் இயேசுவைக் கண்டார்கள். இவர்களைப் போல் நாமும் தேடுவோம். கண்டு மகிழ்வோம்.

ஞானிகள் தடைகளைக் கடந்து வந்தது போல், குடும்பத்தில் வரும் பிரச்சினைகளைக் கடந்து, துன்பங்களில் ஒருவர் ஒருவரோடு ஒன்றித்து செயல்படுவோம்.

குடும்பத்தில் தொலைக்காட்சிக்கும், கைபேசிக்கும் எவ்வளவு முக்கியத்துவம் தருகின்றோமோ அதைவிட அதிகமாக குடும்ப செபத்திற்கும், பக்தி முயற்சிகளுக்கும் முக்கியத்துவம் தருவோம். நாம் விரும்பும் தேவைகளை பிறந்திருக்கும் பாலன் இயேசு தருவார் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. திருமுழுக்கு யோவானால் சான்று பகரப்பட்ட ஒளியானவரே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் திரு அவைப் பணியாளர்கள், இயேசுவின் முக ஒளியை உணர்ந்து, எளிமையான தாழ்ச்சியுடன் இறை வாழ்க்கையை மேற்கொள்ளவும், வாழும் கிறிஸ்துவாக மக்களுக்கு முன்செல்லவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. தம் முக ஒளியைக் காட்டி மண்ணகத்தைப் புதுப்பிப்பவரே எம் இறைவா!

எம் நாட்டினை ஆளும் ஆட்சியாளர்கள், நாட்டின் முதுகெலும்பாகிய விவசாயத்தைப் பேணவும், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த திட்டங்களைச் செயல்படுத்தி, மக்கள் நலனில் அக்கறையோடு செயல்பட ஞானம் அருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. மனிதரான வாக்காகிய இயேசுபாலகனே!

உம் பிறப்பு விழாவில் மகிழும் நாங்கள், உமக்கு விருப்பமான வாழ்வு வாழவும், எளியவர்களுக்காக, எளியவர்களோடு எங்கள் பொருள், நேரத்தைப் பகிர்ந்து கொண்டு அர்த்தமுடன் இயேசு பிறப்பு விழாவைக் கொண்டாட வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. மண்ணில் பிறப்பெடுத்த விண்ணக கதிரே!

எம் பகுதிவாழ் மக்களை ஆசீர்வதியும். இயேசுவின் பிறப்பால் குடும்பங்களில் மகிழ்ச்சி நிறைவாகவும், தொழில் முன்னேற்றம் அடையவும், தாழ்ச்சி, தயை குணம் நிரம்பவும், இதயத்தின் வேண்டுதல்கள் இறைத் திருவுளத்தால் நிறைவேறவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com